RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s214

# பழந்தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு

வே. மாரீஸ்வரி [அ, *]

[அ] தமிழியல் துறை, இ.மா.கோ. யாதவர் மகளிர் கல்லூரி, மதுரை-625014, தமிழ்நாடு, இந்தியா.

# Mother Goddess Worship in Ancient Tamil Literature

V. Mariswari [a, *]

[a] Department of Tamil, E.M.Gopalakrishna Kone Yadava Women's College, Madurai-625014, Tamil Nadu, India.

* Corresponding Author:
vmarees1982@gmail.com

Received: 04-01-2021
Revised: 18-04-2021
Accepted: 13-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

An ancient Tamil people worship begin from nature; Even though the first worship starts from women, women become as a God for their extreme quality of maternity. In ancient Tamil literature (Sangam Literature, Epic literature, Nilakesi etc.), the Number of evidences are found for the mother Goddess worship of ancient Tamil peoples. This Research articles give detailed explanation about the mother Goddess worship. The aim and objectines of this article is to find out the mother Goddess worship with the evidences of ancient Tamil Literature. In this research articles Descriptive Criticism, Historical Criticism and Analytical Criticism are applied.

**Keywords:** Vedic principles, Sangam literary, Epic literature, Nilakesi

## முன்னுரை

மனித மனம் ஒரு பலமற்ற கொடியைப் போன்றது. அதனால் தனித்து நிற்க இயலாதென்பதால் ஏதாவது ஒன்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு படர்ந்து எழுவதே அதன் இயல்பாகும். இத்தகைய மனித மனநிலையின் விளைவுகளே வழிபாடு தோன்ற அடித்தளமாக அமைந்தனது எனலாம்.

இயற்கையோடு இயைந்த மனித வாழ்வு பல்வேறு வளர்நிலைகளைப் பெற்றுள்ளது. அச்ச உணர்வின் காரணமாகவும், தனது மன உணர்வினைப் பகிர்ந்து கொள்ளும் இடமாகவும் வழிபாட்டைத் தொடக்ககால மனிதன் தொடங்கினான். இதனால் மனத்தின் இறுக்கநிலையை அகற்றும் இடமாகவும் இறைவழிபாடு தொடங்கியது. குறிப்பாகப் பெண் தெய்வத்தைத் தாய்த்தெய்வமாக வழிபட்டதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சமூக மரபுகள்

பழந்தமிழர் பல இனக்குழுவாக வாழ்ந்த காலகட்டத்தில் அவ்வினக் குழுவுக்குப் பெண்ணே தலைமை ஏற்றாள். அக்காலக் கட்டத்தில் இனக்குழுவினர் முதன் முதலாக வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். அத்தொழிலிலும் பெண்களே முதன்மை பெற்றுத் திகழ்ந்தனர். எனவே அச்சமுதாயம் தாய்வழிச் சமுதாயம் எனப்பட்டது. இதனை,

> "உழவுத் தொழிலின் தொடக்கத்தில் பெண்களே முக்கியப்
>
> பங்கு எடுத்துள்ளனர்."

எனக் க.கைலாசபதி கூறுவதால் அறியலாம்.

"இன்று தந்தை குடும்பத்திற்குத் தலைவராயிருப்பது போல் தாய் தலைவியாக ஒரு காலத்தில் இருந்தாள். அக்காலத்தில் தந்தையின் முதன்மை உண்டாகாமையால் பிள்ளைகள் தாய்வழி அறியப்பட்டனர். தாயே எல்லா வல்லமையும் உடையவள் என நினைத்தமையால் அவர்கள் கடவுளைத் தாய் வடிவில் வழிபட்டார்கள் என்று ந.சி.கந்தையாபிள்ளை தாய்த் தெய்வ வழிபாட்டுத் தொடக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நிலையில் தந்தைக்கு முதலிடம் கொடுக்கப்படுவதுபோல் பழங்காலத்தில் தாய்க்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள்.

சமுதாயத்தில் முதன்மை பெற்ற பெண் வழிபாட்டிலும் முதன்மை பெற்றிருக்கிறாள். மக்கள் பெண் தெய்வங்களைத் தங்கள் தாயாக நினைத்து வழிபட்டு வந்திருந்தனர். உயிர்களைப் பெருக்கும் ஆற்றல் பெண்களுக்குரிய பண் பாகும். நோய்க்காலத்தில் குழந்தையைத் தாய் அக்கறையுடன் பேணிக்காக்கிறாள். இந்த அடிப்படைப் பண்புகளை வைத்து மனித சமூகத்தில் மக்களினப்பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடைப் பெருக்கம், மழை இவற்றிற்காகவும், நோய்களிலிருந்து காக்கவும் தாய்த்தெய்வ வழிபாடு தோன்றிய தாகத் தொ.பரமசிவன் கூறுகிறார்.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்களில் தாய்த்தெய்வ வழிபாடு காடுகளில்தான் நடந்திக்கிறது. தாய்த் தெய்வம் காட்டில் உறைபவளாகவே கூறப்பட்டுள்ளது. முன்னர் தாய்த்தெய்வத்தை மக்கள் காட்டிற்குச் சென்று வணங்கி இருக்கிறார்கள். இப்போது காடுகளில் சென்று வணங்குவதென்பது அரிதாகிவிட்டது.

" . . . . . . . . . . . . .ஓங்கு புகழ்

கானமர் செல்வி அருளலின் வெண்கற்

பல்படைப் புரவி எய்திய தொல்லிசை

நுணுங்குநுண் பனுவற் புலவன் பாடிய

இனமழை தவழும் ஏழிற் குன்றத்துக்

கருங்கால் வேங்கை செம்பூம்"

'கானமர் செல்வி' என்ற தாய்த்தெய்வம் அருளியதால் நன்னன் வெண்கால்களையுடைய குதிரைகளைப் பரிசாகப் பெற்றான் என்று அகநானூறு கூறுகின்றது. தெய்வத்திடம் மனமுவந்து வணங்கினால் தங்களது கோரிக்கைகள் நிறை வேறும் என்ற நம்பிக்கை காலங்காலமாகத் தமிழர்களிடம் காணப்படுகின்றது.

"வலை வலந்தன்ன மென்னிழன் மருங்கில்

காடுறை கடவுட் கடன் கழிப்பிய பின்றே"

என்று பொருநராற்றுப் படையும்,

காட்டில் உள்ள தெய்வத்தைப் "பெருங் காட்டுகொற்றி" என்று கலித்தொகையும் கூறுவதால் இதனை அறியலாம். பழந் தமிழரின் வெற்றித் தெய்வமாகக் கொற்றவை கருதப்பட்டுள்ளது.

"வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ"

என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. கொற்றவையைப் போருக்குச் செல்லுமுன் வீரர்கள் வழிபட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று அறிய முடிகின்றது.

தமிழர்கள் துர்க்கைக்குப் பூசை செய்தனர் என்பதை,

"விடர்முகை அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்

கடனும்பூணாம் கைந்நூல் யாவாம்”

என்னும் குறுந்தொகைப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. காடுகெழு செல்வி பெற்ற முருகனுக்கு வள்ளியை மனைவியாக்கினர். இதனை,

“முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல

நின்”

என நற்றிணைப் பாடல்வரி எடுத்துக் காட்டு கின்றது. இந்த வள்ளியும் ஒரு வகையில் தாய்த் தெய்வமேயாவாள்.

தாய்த் தெய்வ வணக்கத்தில் பாவை நோன்பு என்பது ஒன்றாகும். பாவை என்பது கன்னித் தாய்தெய்வமாகத் தெரிகின்றது[11] என பி.எல்.சாமி குறிப்பிடுகிறார்.

அம்பா என்பதற்குத் தாய் என்று பொருள் கூறுவர். இதனைப் பின்வரும் பரிபாடல் வரிகளால் அறியலாம்.

“வெம்பாதாக வியனில வரைப்பென

அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர்”

## காப்பியங்கள்

சிலப்பதிகாரத்தில் தேவி திருமாலின் உடன் பிறப்பு என்பதை “மாலவற்கிருங்கிளை திருமாற் கிளையாள்” என்ற தொடர் சுட்டுகின்றது. சிவனாரின் உடலில் பாதியாகச் சக்தி திகழ் வதைக் “கண்ணுதல் பாகம் ஆளுடையாள் கங்கை அணிந்த கண்ணுதலோன் பாகத்து மங்கை உரு” என்ற தொடர்கள் கூறுகின்றன. மும்மூர்த்திகளுடைய உள்ளங்களில் இலங்கும் ஒளிவளர் விளக்காகவும், மேலான தெய்வ மாகவும் சக்தி திகழ்வதாகச் சிலம்பு கூறுகின்றது என வே.இரா.மாதவன் குறிப் பிடுகிறார். ஆண் உருவில் பாதிப் பெண் உரு இருந்தது. சிவன் என்றாலும் சக்தி என்றாலும் ஒரு பொருளைக் குறிப்பனவாக அமைந்துள்ளன.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரைக்குச் செல்லும் போது வழியில் அன்னை சக்தி கோவிலில் நடக்கும் விழா நிகழ்ச்சிகளைக் காண்கின்றனர். அக்கோவில் “ஐயை தன் கோட்டம்” [14] என்றழைக்கப்படுவதாக வே.இரா.மாதவன் குறிப்பிடுகிறார்.

காப்பியத்தில் அன்னைக்கென்று பல பெயர்கள் இருந்தனை,

“தலைமிசை நின்ற தையல் மலர் தொழும்

அமரி குமரி கவுரி சமரி

சூலி நீலி மாலவற் கிளங்கினை

ஐயை செய்பவள் வெய்ய வாட்டக்கை”

என்னும் சிலப்பதிகாரப் பாடலடிகளால் அறியலாம்.

அமரி (மரணம் இல்லாதவள்), குமரி (சீரிளமைத் திறம் கொண்டவள்), கவுரி (தாமரைப்பூ நிறந்தாள்), சமரி (பேராற்றல் உடையவள்), சூலி (சூலப்படையாள்), நீலி (கரியாள்), ஐயை (தலைவி), செய்பவள் (சிறந்தவள்), காளி (காலத்தை வென்றவள்) என்று தாய்த் தெய்வங்களுக்குப் பல பெயர்கள் வழங்கியிருப்பதை இளங்கோவடிகள் சிலம்பில் குறிப்பிடுகிறார்.

தாய்த்தெய்வமான கண்ணகி மதுரையை எரித்தாள். ஆடிமாதம் வெள்ளிக்கிழமை அம்மாவாசை அன்று மதுரையை விட்டு வெளியேறியதாகச் செய்தி கூறப்படுகிறது. ஆடி மாதம் 14 ஆம் நாள் தாய்த்தெய்வமான கண்ணகி சேரநாட்டு எல்லையை அடைந்தாள். நேராக மேலைக் கூடலூர் அடைந்து அங்கிருந்து அடிமேல் அடி வைத்து மங்கலதேவி மலையை வேங்கைக் கானலை நோக்கிச் சென்றாள்.

அங்கேயே தாய்த்தெய்வமான கண்ணகி உயிர்விட்டாள் என்று சுந்தரராசன் குறிப்பிடுகிறார். கண்ணகி வழிபாடு நாளுக்கு நாள் வளர்ந்து தென்தமிழ் நாட்டில் பகவதி வழிபாடாக மக்களிடம் நிலைபெற்றுவிட்டது.

இதே போல் நாட்டரசன் கோட்டை, கண்ணாத்தாள் கோயிலும் கண்ணகி தாய்த் தெய்வத்துக்கு உரிய தெய்வமே என்று மு.இராகவையங்கார் குறிப்பிடுகிறார். இன்றும் கண்ணகி சிலையைக் கொண்டு பல இடங்களில் வழிபாடு நடந்து கொண்டிருக்கிறது.

## நீலகேசி

நீலகேசியில் பெண் ஒருத்தி குழந்தைப் பேறடையாமையால் (கானமோடி) தாய்த் தெய்வமான பிடாரியின் திருமுன் வந்து சொல்லி வேண்டியதாகக் கூறப்பட்டுள்ளது என்பதை

"பண்டிந் நின்ற பணைத்தோளி பாலற்

பொறாமையைக்

கண்டியாமிக் கணமோடி தன்பாற்

சொன்னோமாக"

என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

## மூவேந்தர்களின் தாய்த்தெய்வ வழிபாடு

பழந்தமிழர் தொழுத கொற்றவை அயிரை மலையிலும், விந்திய மலையிலும் துர்க்கை (கொற்றவை) இடம்பெற்றுள்ளதாகப் பதிற்றுப் பத்து கூறியுள்ளது.

சேரர்க்குரிய குலதெய்வமாகக் கொற்றவை போற்றப்பட்டுள்ளது என்று பி.எல்.சாமி குறிப்பிடுகிறார்.

"நிறம்படு குருதி புறம்படி னல்லது

மடையெதிர் கொள்ளா வஞ்சு வருமரபிற்

கடவுளயிரை நிலைஇக்"

அயிரை மலையில் இருந்த கொற்றவை வீரர்களுடைய உயிரிலிருந்து பெறப்பட்ட குருதியையே காணிக்கையாக ஏற்றுக் கொண்டது என்றும் பகைவரது குருதியோடு கலந்த சோற்றுப் பிண்டத்தையே காணிக்கை யாக ஏற்றது எனவும் அறிய முடிகின்றது.

சோழர்குல மக்கள் நிதம்ப சூதனி (கொற்றவை) என்ற பெண்தெய்வத்தைத் தாய் தெய்வமாக வழிபட்டனர். இந்தக் கொற்றவையே எல்லா சக்திகளுக்கும் மூலமான சக்தி என்றும் அரசர்களுக்கு வீரம், வெற்றி, அரசப்பதவி அனைத்தையும் தருபவள் என்றும் கருதினர். 'அபயன் உதித்த குலத்து உபயகுலத்து முதல் திருமதி' என்று சயங்கொண்டாரால் தேவி போற்றப்பட்டாள். இவள் இராஜராஜேஸ்வரி என்றும் அழைக்கப் பட்டாள். இராஜராஜ சோழன் இந்தக் கொற்றவை பெயரைத் தரித்தவன் என்றும் கூறலாம் என்பர்.

பாண்டியர்கள் மீனாட்சியைத் தாய்த் தெய்வமாக வழிபட்டனர். மீனாட்சியே பாண்டிய அரசை தோற்றுவித்த தலைவி என்றும் பாண்டிய வம்சமே மீனாட்சியிலிருந்து தோன்றியதாகக் கருதுவர்.

மதுரைக் கோயிலுள்ள ஓவியத்தில் அங்கயற்கண்ணியான மீனாட்சியை வணங்கிச் செங்கோலைத் தேவியிடமிருந்து திருமலை நாயக்கர் பெற்றதாக எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. பாண்டியருக்குப் பின்வந்த நாயக்கர்கள் கூட மீனாட்சிக்கே பாண்டிய அரசாட்சி உரியதென்று கருதி

அவளிடமிருந்து ஆட்சியைப் பெறுவது போலச் சடங்குகள் செய்து காட்டினர் என்று பி.எல்.சாமி குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

மனித சமூகத்தில் மக்களினப் பெருக்கம், உணவு உற்பத்திப் பெருக்கம், கால்நடைப் பெருக்கம், மழை இவற்றிற்காகவும் நோய்களி லிருந்து காக்கவும் தாய்த்தெய்வ வழிபாடு தோன்றியிருக்கலாம் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் மிகுதியாக உள்ளன.

## References


Kailasabathi, K., (1966), Ancient Tamil lifestyle and Adoration, Paari Nilayam, Chennai, India

Kandhaiya pillai, N.S., (1958) Shaivism History, Author Centenary Society, Chennai, India

Madhavan, V.R., (1985), Silapathikaram Thoughts, Meyyappan Pathippagam, Chindambaram, India

Ragavaiyyangar, M., (1959) Pathini Vanakam, Jeyakumari Stores, Nagacoil, India

Sami, P.L., (1975) Mother Goddess Worship in Tamil literature, P.R.V. Press, Chennai, India

Sundarrajan, T., (1968) Tamil national identity, Manivasagar Pathippagam, Chennai, India



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License